பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com


சங்கு 23
ஒலி 019 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 23 வெள்ளிக்கிழமை (07.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




பலாலி விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது

## அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு கூட்டணியாக செயற்படும் காலம் விரைவில்

### யாழில் முன்னாள் அமைச்சர் ரணதுங்க



(யாழ்ப்பாணம்)

அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு கூட்டணியாக ஒன்றிணைந்து செயற்படும் காலம் விரைவில் கைகூடும் என யாழில் வைத்து முன்னாள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பலாலி சர்வதேச விமான நிலையம் மூடப்பட் 15

2023 உயர்தரத்தில்

## புதிய பாடமாக கொரிய மொழி

(கொழும்பு)

2023ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு கொரிய மொழி பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் 15

கிளிநொச்சியில்

## உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 32 வயதுடைய பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் 15

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கோரும்

## இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் ஒப்பம்

(கொழும்பு)

- மனோ கணேசனும் கடைசி நேரத்தில் காலை வாரினார்.
- மலையக, முஸ்லிம் கட்சிகள் இல்லை.
- சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தலைவர்கள் இந்தியத் தூதுவரிடம் நாளை ஆவணம் ஒப்படைப்பர்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அமுல்படுத்த வேண்டும். அதுவரை, ஏற்கெனவே சட்டத்திலுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த 15


(கோப்புப்படம்)

## கொரோனா 18 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 18 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, இலங் 15

## அரிசி விலை 300 ரூபாய்வரை உயரும்

### ஒன்றிணைந்த அரிசி உற்பத்தியாளர் சங்கம்

(கொழும்பு)

புத்தாண்டுக் காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாய்வரை உயரும் சாத்தியம் உள்ளதாக ஒன்றிணைந்த அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.

சேதன பசளை திட்டத்தின் காரணமாக விவசாயிகள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள். பிரதான நெற்செய்கை பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளார்கள். 15



மன்னார் தரவான் கோட்டையில்

## எரிவாயு அடுப்பு வெடித்ததில் குடிசை வீடு தீக்கிரை



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தரவான் கோட்டைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 15

அரச உத்தியோகத்தர்களின்

## ஓய்வு வயதெல்லை 65 ஆக அதிகரிப்பு

### 55 வயதிலும் ஓய்வெடுக்கலாம்

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரித்து பொதுநிர்வாக அமைச்சினால் புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இந்த சுற்றுநிருபம் அமுல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 55 வயதில் ஓய்வு பெறுவது உட்பட ஓய்வூதிய பிரமாணக் குறிப்பில் உள்ள சகல விடயங்களும் அப்படியே நடைமுறையில் இருக்கும்.

2022.01.01க்கு பின்னர் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளவர்கள் விரும்பினால் விண்ணப்பத்தை வாபஸ் பெற்று கடமையாற்றலாம். (ம)

## திருகோணமலை எண்ணெய்க் குதங்கள்; இந்தியாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

### எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில



(கொழும்பு)

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் நேற்று மாலை கைச் சாத்திடப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 15

## நாட்டின் பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது

### ஜே.வி.பி தலைவர் அநுர சாடல்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

சீனாவிடம் இருந்து கடன் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத் 15

கிளிநொச்சியில்

## காஸ் அடுப்பு வெடித்து சிதறியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு மயில் வாகனபுரம் பகுதியில் நேற்று எரிவாயு அடுப் பொன்று வெடித்துச் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிவாயுப் பிரச்சினையால்

# நாட்டில் 20 சதவீதமான சிறு உணவகங்கள் மூடல்

(கொழும்பு)

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு என்பன காரணமாக, நாட்டில் 20 சதவீதமான சிறு உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நட்சத்திர விருந்தகங்களின் உணவு தயாரிப்பாளர்கள் மாற்று வழிகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன், உணவு தயாரிப்புக்காக விறகு அடுப்பை பயன்படுத்துவது பிரதான மாற்றுவழியாக உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் மண்ணெண்ணெய் அடுப்பும் பயன்படுத்தப்படுவதாக தொழில்சார் உணவு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் தில்ருக்ஷான் தாபரே தெரிவித்துள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிஜயா இந்திராணி

(ஆரியகுளம், யாழ்ப்பாணம்)



மலர்வு : 1950.11.17
உதிர்வு : 2022.01.04

ஆரியகுளம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா இந்திராணி அவர்கள் கடந்த 04.01.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிஜயாவின் பாசமிகு மனைவியும் அசி (ஜேர்மன்), சம்பா (லண்டன்), ரமா (சுவிஸ்), தர்சினி, சூட்டி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகன், கஜன், தீபன், துர்க்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதுரா, மௌலிகா, நதுஸ், சுபாஸ், காவியன், ஜெஸ்வின், சந்தோஷ், பிரித்தி, நவீன், லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.01.2022) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (9431)

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
077 281 1211
தகவல் :- குடும்பத்தினர்



இணுவில் இந்துவின்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **நிறைமதி தெய்வீகலிங்கம்**
அவர்களின் அன்புக் கணவர்

### அமரர் அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்

அவர்கள் மரணமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயருருகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
இணுவில் இந்துக் கல்லூரி (9440)





காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்

### கலைஞர்கள், அறிஞர்களுக்கிடையிலான கலந்துரையாடல் அழைப்பு

இடம் : துர்க்கா மணிமண்டபம், நல்லூர்
காலம் : 09.01.2022 ஞாயிறு பி.ப. 2.00 மணி

குறிப்பு
- கலைஞர்கள், அறிஞர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து ஒத்துழைப்பு வழங்கவும்.
- சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நடைபெறும்.
- குறித்த நேரத்திற்கு நிகழ்வு ஆரம்பமாகும்.

(C-3450)

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ். கிளை
077 578 6638



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## மின் தகன நிலையம் அமைத்தல் அடிக்கல் நாட்டும் நிகழ்வு

Kili People & மயான அபிவிருத்தி குழு
கிளிநொச்சி பொது மயானம்
திருநகர், கரைச்சி பிரதேச சபை



இடம் : திருநகர் பொது மயானம்
காலம் : 07.01.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : முற்பகல் 11.00 மணி

மயான அபிவிருத்தி குழு
KILI PEOPLE இணைந்து முன்னெடுக்கும்
பொதுமக்கள் நன்கொடை நிதி வேலைத்திட்டம்

திட்டத்தின் வெற்றியில் இணைந்திருக்கும் பெருங்கொடையாளர்கள், நன்கொடையாளர்கள், பொதுமக்களையும் இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

ஒருங்கிணைப்பு

KILI PEOPLE
கிளிநொச்சி பொது மயான அபிவிருத்தி குழு, கரைச்சி பிரதேச சபை.

(C-3459)



## NEW SCIENCE HALL

Kannathiddy, Jaffna

### 2023 - BATCH
CHEMICAL CALCULATIONS
SAT, SUN - 9.45 - 11.45

### 2022 - BATCH
ORGANIC CHEMISTRY
SAT, SUN - 11.45 - 01.45

ஆரம்பம்

08.01.2022 SAT

Mr. T. சுசாந்தன்

அலகின் ஆரம்பத்தில் மட்டும் அனுமதிகள் வழங்கப்படும்.

076 569 3006 | 076 566 3006 | 077 791 7611

(C-3457)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான்சி & கொட்டன் புடவைகள் மலிவு விற்பனை



## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

ரூ.3000/- முதல் 10,000/- வரை விற்பனை செய்யக்கூடிய

# ரூ.1000/- மட்டுமே

# இறுதி 4 நாட்கள் மட்டுமே!

ஜனவரி 07,08,09 மற்றும் 10 ஆம் திகதிகளில் **WITH NEW STOCK**

காலை 09.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

**இடம்: நல்லூர் மயிலூரன் அரங்கம் திருமண மண்டபம்.**
590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் கோவில் முன்பாக), யாழ்ப்பாணம்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எமது புடவைக் காட்சியறைகள் மூடப்படுவதால்

## சமநிலையான 90% விலைக் கழிவுடன்

## யாழ்ப்பாணத்துப் பெண்களே நீங்கள் இதுவரை கண்டிராத புத்தம் புதிய டிசைனர் புடவைகள்

| | | | |
|---|---|---|---|
| • பெங்களூர் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • மைசூர் டிசைனர் சேலை, | Rs. 1000/- |
| • மணிப்பூர் கோட்டா, செக் சேலை, | Rs. 1000/- | • பனாரசி பார்ட்டிவேர் டிசைனர் சேலை, | Rs. 1000/- |
| • ப்யூர் ஷி/பான் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • பேன்சி பார்ட்டிவேர் சேலை, | Rs. 1000/- |
| • தானி ஷி/பான் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • டிஷ்யூ டிசைனர் சேலை, | Rs. 1000/- |
| • பாந்தனி பிரிண்ட் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • இத்தாலியன் க்ரேப் டிசைனர் சேலை, | Rs. 1000/- |
| • பேப்பர் சில்க் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • பெல்காம் டிசைனர் சேலை, | Rs. 1000/- |
| • 90 கிராம் டிசைனர் சேலை, | Rs. 1000/- | • காஷ்மீரி டிசைனர் சேலை | Rs. 1000/- |

மறவாதீர்கள் எங்களிடம் எந்த சேலை எடுத்தாலும் ஒரே விலை

# ரூ. 1000/- மட்டுமே

(9442)

**WANTED SALES GIRLS | ☎ 0766 427996 | ENTRY FREE**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
02 - 09 - 1950

மறைவு
06 - 01 - 2022

அமரர்

# இராசையா தெய்வேந்திரன்

( உரிமையாளர் : இந்திரன் ஜீவல்லறி, சாவகச்சேரி )

மீளாத்துயில் கொண்டு - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே!
கலையாத நினைவுகளுடன்
உதிரும் எம் கண்ணீர் அஞ்சலி!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஜே.கே. ஆர். நகை மாளிகை உரிமையாளர்
கண்டி வீதி, சாவகச்சேரி

(9451)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொழிப்பிரச்சினை தீராத வரை

## இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

## எஸ்.பி.திவாரத்ன சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**நாட்டில் மொழிப் பிரச்சினை இன்றும் தீர்ந்த பாடில்லை. தெற்கில் உள்ள அரச அதிகாரிகள் தனிச் சிங்களத்திலேயே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு அலுவலக கடிதங்களை இன்றுவரை அனுப்புகிறார்கள் என முன்னாள் மீள் புனர்வாழ்வு மற்றும் அத்தியாவசிய சேவை ஆணையாளர் எஸ்.பி. திவாரத்ன தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் தோன்றி சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினாலே நாட்டின் அரைவாசிப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் நல்லவர்கள். எனது 40 வருட கால அரச சேவையில் அவர்களோடு இணைந்து சிறப்பாக சேவையாற்றியுள்ளேன்.

இன்றும் தெற்கில் உள்ள அரச அதிகாரிகள் தனிச் சிங்களத்திலே வடக்கு, கிழக்கு மக்களுக்கு அலுவலகக் கடிதங்களை அனுப்புகிறார்கள். இம் மொழிப் பிரச்சினைக்கு அரச மட்டத்தில் இருந்து கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும். இந்த மொழிப் பிரச்சினை இன்று மட்டுமல்ல ஜி.ஜி. பொன்னம்பலம் காலத்தில் இருந்தே தொடர்கிறது எனவும் அவர் தெரிவித்தார். (நி)



# நீங்கா நினைவுடன் நெஞ்சம் உருகிட
# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.செல்லையா சண்முகதாசன்

(ஓய்வு நிலை கிராம சேவை அலுவலர்
கிளிநொச்சி, பூநகரி)

மண் மகிழ 27.09.1955 — உள்ளங்கள் நெகிழ 19.12.2020

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் – எம்
ஆருயிர் அப்பாவுக்கு ஈடாகுமா?
ஊர் போற்ற உத்தமராய் வாழ்ந்தீர்
ஊர் விட்டு ஊர் சென்ற போதும்
ஊர் உறவுகளை உயிராய் நேசித்தீர்
புலம் பெயர் தேசத்திலும் – சிறப்புடன்
வாழ்ந்தே கொரோனா அரக்கன்
உம் இனிய உயிரைக் கவர்ந்தானே
எம்மை வஞ்சித்து கலங்கவிட்டானே

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பிள்ளையினார் சண்முகலிங்கம் - தம்பி
(நவம்) குடும்பத்தார்

தம்பிராய் பூநகரி

(9430)

# 262 வாகனங்களை விடுவிக்க தயாராகும் சுங்கத் திணைக்களம்

(கொழும்பு)

சட்ட திட்டங்களை மீறி, நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர்,. விடுவிக்கப்படாமல் சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள வாகனங்களை விடுவித்து, அதனூடாக இலாபம் ஈட்டுவது தொடர்பில் அந்த திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

அவ்வாறான வாகனங்களை, தண்டப்பணம் மற்றும் வரி ஆகியவற்றை அறவிட்ட பின்னர் விடுவிப்பதனூடாக வருமானம் ஈட்டுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.வி. ரவிப்பிரிய தெரிவித்தார்.

அதன்படி, சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில், சட்ட திட்டங்களை மீறி இறக்குமதி செய்யப்பட்ட 262 வாகனங்கள் உள்ளதாகவும் அவற்றை இம்மாதம் நிறைவுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை - வகை III
2. யா/ வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம் - வகை III
3. யா/ அச்செழு மெதடிஸ்த மிஸன் த.க.பாடசாலை - வகை III
4. யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் - வகை II
5. யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் - வகை II
6. யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் - வகை II
7. யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் - வகை II

தகைமைகள்:

- வகை III பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II, தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு:

- மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காதவிடத்து வேறு வலயங்களைச் சேர்ந்த அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2022.01.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2022"** எனக் குறிப்பிடவும்.

**திரு.மு.இராதாகிருஷ்ணன்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்.**

(C-3448)

# இராசிபலன்

07.01.2022
மார்கழி 23, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.03 மணிவரை

சதயம் முற்பகல் 11.53 மணிவரை
சுபநேரம் 6.32-8.02 மணிவரை
இராகுகாலம் 11.02-12.32 மணிவரை

சந்திராஷ்டமம்: பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், மனதில் நினைத்த திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலம் சீராகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைப்பளு அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், செய்தொழிலில் சிறு மாற்றம் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

உனது முகம் எப்பொழுதும் பூத்த புதுமலராய்த் திகழட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த குடும்பஸ்தர் தற்கொலைக்கு முயற்சி

(குப்பிழான்)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பில்

மேலும் தெரிய வருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் தனது மனைவியைத் தாக்கியதாக அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் மேற்படி நபர் தான் அணிந்திருந்த சாரத்தினைக் கழற்றி சாரத்தில் தூக்குப்போட முயன்றுள்ளார் இதனை அவதானித்த பொலிஸார் அவரைக் காப்பாற்றிப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (5-6-18-33)



தமிழ் அரசியல்வாதியும், சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படத்தின் முன்பாக நினைவுச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். சட்டத்தரணி நடராஜா காண்டீபன், சட்டத்தரணி க.சுகாஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் : சிவசாந், ரவிசாந்)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என சாவகச்சேரி நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் Zoom செயலி ஊடான "யாவர்க்கும் நாம்" எனும் மருத்துவக் கருத்தமர்வுகள் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி - 9 மணி வரை இடம் பெற்று வருகிறது. நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் கருத்தமர்வு "சிறுநீரக நோய்களும் சமுதாய சுமைகளும்" எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் அறிவித்துள்ளார். Meeting ID: 89985282023, Pass code: 354485 (5)

## யாழ்.பல்கலையில் முதன் முதலாக இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

"சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம்" எனும் தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிகழ்வுகளை நிகர்நிலையிலும் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப் பிரிவு மேற்கொண்டுள்ளது. (5-6-33)

## திறன் வகுப்பறை திறப்பு விழா

(குப்பிழான்)

வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 01 மணியளவில் அதிபர் ந.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ம.இலட்சுமிநாராயணசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (5-6)

## அரங்க கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 70 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 6473 348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (5-6)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எழுதிய "எளிமை மிகு பரிபாலக ஆளுமை" என்ற கைநூல் வெளியீடு இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம் பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (5-6-33)

# குறை'களை' பதிகம்

## விக்கிரக திருட்டின் சூத்திரதாரிகள் யார்?



குறை களைய
பரம் பொருளை நினைந்து
பதிகம் எழுதினேன்
குறை தீர்க்கும் அவன்
திருவுருவச் சிலைகளை
கவரும் கள்வர் கதை கேட்டு
பதறித் துடித்தேன்

புனிதம் பேண பாதணி அகற்றி
ஆணவம் நீங்க ஆடை களைந்து
ஆலயத்தில் லயத்திருக்கும் ஆண்டவனை
அணுகி;
அவனிடம் எம் மனக் குறை களைய வேண்டி
கும்பிட்டு மற்றாடி
அடியளித்தும்
பிரதட்டை செய்தும்
சிதறு தேங்காய் அடித்தும்
வேண்டுவோம்
வேண்டும் வரம்
அவன் தந்தருளுவான்

இவ்வாறே எம் வாழ்வியலுடன்
ஒன்றியிருக்கும் ஆண்டவனை
கவர்ந்து சென்று விற்பதற்கு
மனம் வந்ததோ பாதகர்க்கு!

புனிதத்தின் பொருளாய்
எங்கும் நிறைந்திருக்கும் அத்திருமேனியை
கறைபடிந்த கரங்களால் கவர்ந்திட;
இறைவா, அவர் குரல்வளை நசிக்கிடாமல்
கல்லாய் இருந்ததேனோ?

எம்மைக் காத்து நிற்பது நீ
ஏனோ யார்க்கோ அப்பெயரைச் சூட்டி
உன்னையே கவர வைத்தாய்

ஆதிக் குடிகளென்றோம்
அனைத்திலும் உயர்ந்து நின்றோம்-இன்று
அத்தனையும் இழந்து
நாதியற்றுக் கிடக்கின்றோம்
மீதி இருக்கும் மதத்தை
அழித்துவிட நினைக்கும்
ஆதிக்க சக்திகளின் சதி வலையில்
சிக்காமல் இருந்திடவே
இப்போதே விழித்திடுவோம்

விக்கிரகத் திருட்டின்
சூத்திரங்கள் அனைத்தும்
விசாரணைக்கு வரவேண்டும்-அதிலும்
அவை வெளிச்சத்திற்கு வர வேண்டும்
அப்போதே எம்மையும் எம் மதத்தையும்
காத்துவிட முடியும்

மாவை. நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடனடியாக வெளியேற்றுவதே நல்லது

**திலும் அமுனுகம தெரிவிப்பு**

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டதன் காரணமாகவே கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 13 பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினர் எந்த நேரத்திலும் காலைவாரி விடலாம் என்பதால், தற்போதே அவர்களை வெளியேற்றுவது சிறந்தது. மைத்திரியின் ஆட்சிக்காலத்திலே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றது. இதனால், தற்போதைய அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைக்கும் தார்மீக உரிமை அவருக்கு கிடையாது எனவும் திலும் குறிப்பிட்டார். (நி)

# பெருந்தெருக்கள் அமைச்சை வசப்படுத்துவாரா நாமல்?

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை மறுசீரமைப்பின் போது, ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வகித்து வரும் பெருந்தெருக்கள் அமைச்சு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



F.X.C. மடோன் எல்விஸ் B.Sc

(ஆசிரியர், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி)

எமது பெறாமகனும் தேசிய மட்ட தடகள வீரருமாகிய
**மடோன் எல்விஸ்**
இன்று 07.01.2022 சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் விளையாட்டு விஞ்ஞானமாணி பட்டம் பெறுவதை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.
மேலும் பல சிறப்புக்களை அவர் பெற்றிட இறையாசி வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
F.X. அன்ரன் (சித்தப்பா)
அமலா அனோஜா (சித்தி)
மற்றும் சகோதரர்கள் மாறியோ, நிக்கலின்,
யாழ்ப்பாணம்.

(C-3446)



# பகிரங்க ஏலவிற்பனை

எமது நிறுவனத்தில் பாவனைக்கு மேலதிகமாகவுள்ள மற்றும் எமது பாவனைக்கு தேவையற்ற பொருட்களினை 16.01.2022 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு எமது பிரதான அலுவலக வளாகத்தினுள் ஏல விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் பின்வரும் நிபந்தனைக்கு அமைய செயற்படவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது.

- விற்பனைக்குரிய பொருட்களை ஜெயந்தி நகரில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் இன்றிலிருந்து 14.01.2022 ஆம் திகதி வரை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரை பார்வையிடலாம்.
- ஏலவிற்பனையில் பொருட்களை பெறுபவர்கள் உரிய தொகையை பணமாகச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.
- ஏலவிற்பனையின் போது கூடியவிலை கோருபவர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விற்பனைக் குழுவின் தலைவரின் முடிவே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- பொருள் தனியாகவும் பொருட்தொகுதியாகவும் விற்பனை நடைபெறும்.
- ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் விபரத்தினைப் பெற விரும்புவோர் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

ச.மோகனபவன்,
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.
President: +94773024349
0214923118

(3451)



# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தை, இறைச்சிக்கடைக்கான 14.01.2022-31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல்-2022

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 14.01.2022 – 31.12.2022 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக்கேள்விகள், 27.10.2021 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 13.01.2022 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 07.01.2022 தொடக்கம் 13.01.2022 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | குத்தகை விபரம் | 2022ம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த ஏலத்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) | மாத வாடகை |
|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | |
| 01 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 49,500.00 | 495.00 | 100.00 |
| 02 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 532,000.00 | 5320.00 | 100.00 |
| 03 | நெல்லியடி மீன் சந்தை | 689,000.00 | 6890.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 04 | அந்திரான் சந்தை | 110,100.00 | 1101.00 | - |
| 05 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,042,500.00 | 10425.00 | 100.00 |
| 06 | நவிண்டில் சந்தை | 29,000.00 | 290.00 | - |
| 07 | மண்டான் சந்தை | 45,600.00 | 456.00 | - |
| 08 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 193,100.00 | 1931.00 | 100.00 |
| 09 | சாண்டா சந்தை கோழிக்கடை | 72,200.00 | 722.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை 13.01.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திரகக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

க.த.ஜங்கரன்,
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
06.01.2022

(C-3447)



# பண்ணைத் தொழிலாளி தேவை

இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கியிருந்து, பல்வேறு பண்ணை வேலைகளிலும் ஈடுபடக்கூடிய தொழிலாளி ஒருவர் தேவை.
பசுக்களில் பால் எடுத்தல் வேண்டும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.

MAVAI

திருநாவுக்கரசு நினைவு
மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்

077 234 8877

(9444)



# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

இல. 183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
Reg. No:649
Tel: 021 222 3814

**அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான மீண்டுமொரு சந்தர்ப்பம்**

மேற்படி எமது சங்கத்தின் யாப்பு விதிகளுக்கு மாறாக செயற்பட்டு சங்கத்துடன் தொடர்பற்றிருக்கும் பேக்கரி உரிமையாளர்கள் தம்மை சங்கத்துடன் இணைப்பதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 15.01.2022 இற்கு முன்னர் தம்மை அங்கத்தவராகப் பதிந்து இணைந்து கொள்ளுமாறும் தவறின் மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதையும் மேற்படி சங்கத்தின் பொதுச் சபை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முக்கிய குறிப்பு:** மற்றொரு சங்கத்தில் அங்கத்தவராக இருப்பின் குறித்த சங்கத்தில் இருந்து விலகியமைக்கான உறுதிப்படுத்தலுடன் மட்டுமே எம்முடன் தொடர்பு கொள்ள முடியும்.

செயலாளர்,
கா. பாஸ்கரன்

(C-3444)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் புரட்சி

# கவிழ்ந்தது கஜகஸ்தான் அரசு

**(அல்மாட்டி)**

**எரிபொருள் விலை உயர்வை கண்டித்து கஜகஸ்தானில் பெரும் போராட்டம் வெடித்த நிலையில் அதனைச் சமாளிக்க முடியாமல் பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு இராஜினாமா செய்துள்ளது.**



போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக அங்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும், ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

அதனால் அங்கு இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வளங்களை கொண்ட மத்திய ஆசிய நாடுகளுள் ஒன்றான கஜகஸ்தானில் புத்தாண்டு முதல் திரவ பெற்றோலிய எரிவாயுவுக்கான விலை அதிகரித்தது. இதற்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி நாடான கஜகஸ்தானில் விலை உயர்வு நியாயமே இல்லை எனக் கூறி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். விலை உயர்வை எதிர்த்து தலைநகர் அல்மாட்டி மற்றும் மேற்கு மாகாணமான மாங்கிஸ்டா உள்ளிட்ட பல நகரங்களில் பல ஆயிரக் கணக்கானோர் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

போராட்டக்காரர்களால் தலைநகர் அல்மாட்டி மாநகராட்சி அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது. மேலும் அரச கட்டடங்கள், வாகனங்கள் எரிக்கப்பட்டன. போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

போராட்டத்தை கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும் - பொதுமக்களுக்குமிடையே பெரும் மோதல் வெடித்தது.

பொலிஸார் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன். கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

எனினும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் திரண்டதால் வேறு வழியின்றி பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு இராஜினாமா செய்துள்ளது. இந்த இராஜினாமாவை கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் ஏற்றுக் கொண்டார். (நி)

### பிரான்ஸில் கண்டுபிடிக்கப்பட்ட திரிபு அபாயகரமற்றது உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

பிரான்ஸில் முதல்முறையாகக் கண்டறியப்பட்டுள்ள 'ஐஎச்யு' வகை கொரோனா, இதுவரை அபாயகரமான வகையாக எழுச்சி பெறவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் கொரோனாவுக்கான நிகழ்வு மேலாளர் ஆப்தி மஹ்மூத் கூறியதாவது,

பிரான்ஸில் ஐஎச்யு வகை கொரோனா கண்டறியப்பட்டதிலிருந்து அதனைத் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம்.

அந்த வகை கொரோனாவின் பரவல் தீவிரமெடுப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன. ஆனால் கடந்த நவம்பர் மாதம் அது கண்டறியப்பட்டதிலிருந்து இதுவரை அது அபாயகரமான கொரோனா வகையாக எழுச்சி பெறவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

## அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து 7 சிறுவர்கள் உட்பட 13 பேர் பலி

### அமெரிக்காவில் துயரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலதெல்பியா பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 7 சிறுவர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.


நேற்று முன்தினம் புதன் கிழமை பிலதெல்பியா பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது தளத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று 50 நிமிடங்கள் கடும் போராட்டத்திற்குப் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்தில் 7 சிறுவர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்ததாக பிலதெல்பியா தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது. மேலும் 2 பேர் பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் 4 தீ கண்டறியும் கருவிகள் இருந்துள்ளன. அவை செயலிழந்ததே உயிரிழப்புகளுக்கு காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

## பொம்மைகளின் தலைகளையும் விட்டுவைக்காத தலிபான்கள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறியதை அடுத்து அங்கு கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார்கள்.

நாட்டை தங்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த தலிபான்கள் புதிய அரசாங்கத்தையும் அமைத்தனர்.

இதையடுத்து அவர்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்டு வந்தனர். குறிப்பாக பெண்களுக்கு கடும் நிபந்தனைகளை விதித்தனர். அவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடாது. ஆண் உறவினர் துணையின்றி வெளியே செல்லக்கூடாது என்பது போன்ற உத்தரவுகளைப் பிறப்பித்தனர்.

அதேபோல் திருமணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது.

சலூன் கடைகளில் தாடியை மழிக்கக்கூடாது உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தனர். இந்த நிலையில் தலிபான்கள் அடுத்து ஒரு புதிய உத்தரவையும் பிறப்பித்துள்ளார்கள்.

துணிக்கடைகளில் உள்ள அலங்கார பொம்மைகளின் தலையை வெட்டி எறிய வேண்டும் என்பதே புதிய உத்தரவு.

தலிபான்கள் உத்தரவை அடுத்து பொம்மைகளின் தலைகளை துணிக் கடைக்காரர்கள் துண்டித்து வருகிறார்கள்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி உள்ளது. (நி)

## ஜார்க்கண்ட் பேருந்து விபத்தில் 17 பேர் உயிரிழப்பு



(டில்லி)

ஜார்க்கண்ட் மாநிலம் பாகுர் மாவட்டத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பேருந்துடன் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதில் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், 26 பேர் காய மடைந்துள்ளதாகவும், அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## இந்தியாவில் முதல் ஒமிக்ரோன் மரணம் பதிவு

(டில்லி)

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலம், உதய்பூரில் 2 முறை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 73 வயது முதியவர் ஒமிக்ரோன் பாதிப்பால் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த முதியவரிடம் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை மரபணு பரிசோதனை செய்ததில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியாவில் முதல் ஒமிக்ரோன் மரணம் பதிவாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைகளைப் பொறுப்பேற்றார் நீதிபதி இளஞ்செழியன்



(வவுனியா)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று முன்தினம் புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவருக்கு வவுனியா நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அமோக வரவேற்பளித்தனர். நீதிச் சேவையை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சேவையில் 25 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மீள வந்துள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (5-6-33)

# யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் அதிபருக்கு 'அன்பே சிவம்' விருது



(அராலி)

அகில இலங்கை சைவ மகா சபையால் அறிவிக்கப்பட்ட அன்பேசிவம் விருதானது சமூக செயற்பாட்டாளரும் மூத்த கல்வியியலாளருமாகிய யாழ்.இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்து கல்லூரியின் முன்னாள் அதிபர் அப்பாத்துரை பஞ்சலிங்கத்திற்கு வழங்கப்படவுள்ளதாக சைவ மகாசபை அறிவித்துள்ளது. (5-104)



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில், யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், உள்ளூராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (படம்:-ரவிசாந்தன், சிவசாந்தன்)

# விளக்கமறியல் நீடிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் புத்தாண்டு தினத்தில் இளைஞர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் குத்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு. கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (5-6-315)

# பூநகரி பிரதேசசபை பாதீடு நிறைவேற்றம்

(கண்டாவளை)

பூநகரி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று தவிசாளர் சி.சிறீரஞ்சன் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை சபையில் சமர்ப்பித்தார்.

பாதீடு விவாதங்களையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

20 உறுப்பினர்களைக் கொண்டுள்ள சபையில் பாதீட்டிற்கு 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும் மூன்று உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

5 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

இந் நிலையில் பாதீடு நிறைவேற்றப்பட்டது. (5-6-315-316)

# நூல் வெளியீடு

(பூநகரி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் "பூந்துணர் நறவம் 11" நூல் வெளியீடு இன்று 7ஆம்திகதிவெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூநகரி பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வை மெய்நிகர் (Zoom) வழியூடாக அனைவரையும் இணைந்து கொள்ள பிரதேச செயலாளரும் கலாசா ரப் பேரவைத் தலைவருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் அறிவித்துள்ளார். (5-84)

# வீடு புகுந்து தாக்கி தங்க நகை, பணம் கொள்ளை

(நெளுக்குளம்)

வவுனியா புதுக்குளம் தேவகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன் றிற்குள் நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்தவர்கள் அணிந் திருந்த தங்க நகைகள், பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்,

வவுனியா புதுக்குளம் தேவகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில்பத்திற்கு மேற்பட்டோர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வீட் டிலுள்ளவர்களை தாக்கிவிட்டு அணிந்திருந்த எட்டுப்பவுண் தங்க நகைகள் மற்றும் பதினோராயிரம் ரூபாய் பணம் என்பனவற்றை கத்தி முனையில் கொள்ளையிட்டு, தப்பிச் சென்றுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் குறித்த வீட்டின் உரிமையாளர் தாக்கு தலுக்குள்ளாகிய நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் குறித்து தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மோப்ப நாய் சகிதம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6-299)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (5)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ்ரத்னா விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை வாத்தியக்கலை, கூத்து, கிராமியக் கலைகள், இசைக் கலை, ஒப்பனைக் கலை ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர்களும் இதுவரை இவ்விருதினை பெற்றுக் கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத் துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளுடன் எதிர்வரும் 20.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (5)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை வாத்தியக்கலை, கூத்து, கிராமியக் கலைகள், இசைக் கலை, ஒப்பனைக் கலை ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஏற்கனவே இளங்கலைஞருக்கான கலைத்துறைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளுடன் எதிர்வரும் 20.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (5)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கை நெறியின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் மாணவர்களும் இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ள முடியும்.

இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக மீள ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மீண்டும் மின்சாரம் தடைப்படலாம்

## மின்சார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**எரிபொருள் நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மேலும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கை மின்சார சபையின் அனல் மின் நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இரண்டாவது தடவையாக மூடப்பட்ட போதும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் தற்போது பயன் படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளைக் கப்பலில் இருந்து தரையிறக்குவதற்கான நாணய கடிதத்தை பெறுவதில் டொலர் நெருக்கடியால் சிக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## வாழ்வில் இன்பம் சேர்க்கும் ஸ்ரீ ஐயப்பன் விரதம்



16. சபரி மலைப் பயணம் புறப்படும் போது யாரிடமும் போய் வருகின்றேன் எனக் கூறக் கூடாது.

17. விரத காலங்களில் தலைமுடி வெட்டக் கூடாது.

18. இருமுடிக்கட்டுப் பூஜையை வீட்டிலோ, குருசாமி இடத்திலோ, கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

19. கன்னி ஐயப்பமார்கள் பெரு வெளிப் பாதையில் செல்வது நன்மை பயக்கும்.

20. யாத்திரை முடிந்து வீடு திரும்பும் போது ஐயப்பன் பிரசாதத்தை தலையில் சுமந்தபடியே வீட்டு வாசல், படியில் விடலைத் தேங்காய் உடைக்க வேண்டும். பின்னர் வீட்டில் பூஜை செய்து பிரசாதங்களை விநியோகிக்க வேண்டும்.

21. பூஜை அறையில் குலதெய்வத்தை வணங்கி ஐயப்பன் கோசம் போட வேண்டும். யாத்திரை முடிந்ததும் குருசாமி மூலம் மாலையைக் கழற்றி ஐப்பன் படத்திற்கு அணிவித்து விட்டு விரதத்தைப் பூர்த்திச் செய்ய வேண்டும்.

### அப்பம் -அரவணை

ஒவ்வொரு திருக்கோவிலிலும் வழங்கப்படும் பிரசாதம் முக்கியம் வாய்ந்தது.

திருப்பதியில் லட்டும் பழனியில் பஞ்சாமிர்தமும் எப்படி முக்கியமானதோ அதைப்போல சபரிமலை ஐயப்பன் கோவிலில் அப்பம், அரவணைப் பாயாசம் பிரசித்தி பெற்றது ஆகும்.

நெய், சக்கரை, அரிசி, ஏலக்காய் போன்றவற்றை கலந்து தேவஸ்தான சமையல் அறையில் அரவணை பாயாசம் சுத்தமாகச் செய்யப்படுகின்றது. அதேபோல அப்பமும் தயார் செய்யப்படுகின்றது.

இதனை பக்தர்கள் பல மணி நேரம் காத்திருந்து வாங்கிச் செல்கின்றார்கள்.

### கறுப்பு நிற ஆடை அணிவது ஏன்?

நவக்கிரகங்களின் சனீஸ்வர பகவானுக்கு கறுப்பு நிறம் உகந்தது. தர்ம சாஸ்தாவின் அனுக்கிரகம் பெற்ற அவருக்கு சூரிய மண்டலத்தில் கிரக நிலையை அருளினார். வாரத்தின் கடைசி நாளையும் அவர் பேரில் அழைக்க அருள் புரிந்தார். சனிக்கிழமையை தனக்கு உகந்த நாளாகவும் ஏற்று அருள் புரிந்தார்.

இதற்கு பிரதி உபகாரமாக சனீஸ்வர பகவானும் கறுப்பு நிற ஆடை உடுத்தி சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து சபரிமலை வந்து தர்ம சாஸ்தாவை வழிபடுகிறவர்களுக்கு கஷ்டங்களைக் கொடுக்க மாட்டேன் எனக் கூறினார். இதனால் ஐயப்ப பக்தர்கள் கறுப்பு நிற ஆடை அணிந்த செல்கின்றார்கள். மேலும் கறுப்பு அல்லது காவி நிற ஆடை அணிவதால் ஏழை, பணக்காரன் என்ற பேதத்தைப் போக்கி ஐயப்ப பக்தர்கள் அனைவரும் சமம் என்ற உணர்வை ஏற்படுத்தும். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## கஜமுத்துக்களுடன் கைது

(பதுளை)

பதுளையில் இருந்து அம்பாறைக்கு கார் ஒன்றில் 3 கஜமுத்துக்களை கடத்திச் சென்ற இருவரை விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

## பேருந்து கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கப்படாது

(கொழும்பு)

பேருந்து பயணக் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட மாட்டாது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவே பேருந்து பயண கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எந்த விதத்திலேனும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை பேருந்து பயண கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

அத்துடன் தொடரூந்து பயணக் கட்டணங்களை அதிகரிக்க எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

## எரிவாயுவுக்கு காத்திருந்து மயங்கி விழுந்த நபர்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த நபர் மயங்கி விழுந்துள்ளார். அவரை பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். குறித்த இச்சம்பவம் நேற்று முன்தினம் அம்பலாங்கொடையில் இடம்பெற்றது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 250 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 900 | 1000 |
| தக்காளி | 200 | 200 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 350 | 450 | 450 | 550 |
| பூசணி | 80 | 70 | 70 | 80 |
| புடோல் | 260 | 250 | -- | 320 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 150-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 450 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 180 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 230 | 300 | 240 |
| லீக்ஸ் | 320 | 260 | 300 | 400 |
| பீற்றூட் | -- | -- | -- | 400 |
| கறிமிளகாய் | 480 | 650 | 700 | 500 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 800 |
| போஞ்சி | 250 | 250 | 220 | 270 |
| கத்தரிதம்புள்ள | 300 | 240 | -- | 260 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 260 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 120 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 28 | 50 | 40 |
| ஈரப்பலா | 60 | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் 60 வீத மாற்றம்

## ஜனாதிபதியின் முடிவு

(கொழும்பு)

அடுத்த சில தினங்களுக்குள் அமைச்சரவையில் பாரிய மாற்றங்களை செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில், அமைச்சரவையில் 60 வீதமான மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் அமைச்சரவையில் புதிதாக எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் தற்போது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதுடன் மேலும் சில இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியதை எதிர்த்து போராட்டம்



(திருமலை)

திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் திருகோணமலை பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்னால் கிழக்கு மக்களின் குரல் அமைப்பினூடாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நாட்டை விற்காதே, டொலர் இல்லையென்றால் எண்ணெய்க் குதங்கள் மூலம் நாட்டிற்கு வருமானத்தை அதிகரி மற்றும் தேசிய சொத்துக்களை கூறுபோடாதே என்ற சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர். (நி)

# பால்மாவுக்கான தட்டுப்பாடு மாத இறுதி வரையில் தொடரும்

## இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பால்மாவுக்கான தட்டுப்பாடு இந்த மாத இறுதி வரையில் தொடரும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் அஷோக பண்டார தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், "பால்மா ஏற்றிய கப்பல்கள் இந்த மாத இறுதியில் அல்லது பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியில் வர உள்ளது. எனவே அதுவரை பால்மாவுக்கான தட்டுப்பாடு தொடரும் என அதன் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். (நி)

# ஊழலைத் தடுத்தால் கடனை அடைக்கலாம்

## பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்



(கொழும்பு)

நாட்டில் நிலவும் ஊழல் மற்றும் முறைகேடுகளை தடுத்து நிறுத்தினால் தற்போதுள்ள கடன் சுமையில் பாதியை அடைக்க முடியும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தனியார் வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் திருட்டு மற்றும் மோசடிகளை தடுக்க நடவடிக்கை எடுப்பதே எங்களது முதல் நோக்கமாக இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அரசியல்வாதிகளுக்கு எதிராக மட்டுமன்றி ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு துணைபோகும் அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் விஜித ஹேரத் வலியுறுத்தினார். (நி)

# விறகு அடுப்புக்களைப் பயன்படுத்தும் நட்சத்திர ஹோட்டல்கள்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள முன்னணி நட்சத்திர ஹோட்டல்களில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவு சமைப்பதற்கு விறகு அடுப்புகள் பயன்படுத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது நாடு முழுவதும் நிலவிவரும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நட்சத்திர உணவகங்கள் விறகு அடுப்புகளில் சமைக்க தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த எரிவாயு தட்டுப்பாடானது மேலும் இரண்டு முதல் மூன்று வாரங்கள் நீடிக்கும் என எரிவாயு நிறுவனங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### நீண்ட நெடும் பயணம்

தவறான வழியில் முன்னேறியவர்கள் குறுக்கு வழியில் வெற்றி காண்பவர்கள், பொய்- பித்தலாட்டங்களின் மூலம் ஆதிக்கம் செய்பவர்கள், அநியாய வழியில் சுகத்தை அனுபவிப்பவர்கள் ஆகியோரைக் கண்டு நல்லவர்கள் கூட மனம் தடுமாறுகிறார்கள்.

நல்லவர்களுள் கூட ஒரு சிலர் பொறாமைப்பட்டு மனம் புழுங்குகிறார்கள். மாற்றானின் அக்கிரம வளர்ச்சி கண்டு அவற்றை ஜீரணம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள். இவையெல்லாம் அவசியமே இல்லை. வாழ்க்கை என்பது நீண்ட நெடும் பாதை.

குறுக்குக் கொள்கை, திருட்டு வழி, பக்குவமற்ற பாதை, குருட்டாம் போக்கில் கிடைத்த அதிர்ஷ்டம் என்னும் வாகனங்களைக் கொண்டு நீண்டதூரம் வெற்றிகரமாகப் பயணம் செய்துவிட முடியாது.

குறைபாடுகள் நிறைந்த தவறான வாகனங்களில் ஏறியும், மூச்சிறைக்க ஓடியும் இந்தப் பாதையைக் கடக்க முயல்பவர்கள் நிச்சயம் தோல்வியைத்தான் காண்பார்கள்.

இத்தகையவர்கள் மூச்சிறைக்கவும் முக்கி முணங்கியும் விழுந்து கிடக்க, நல்லவர்கள் நிதானமாக அடியெடுத்து வைத்து உறுதியுடன் நடந்து கொண்டே இருப்பார்கள். உயர்வின் உச்சத்தை அடைந்தே தீருவார்கள்.

இந்த உண்மையை உணராதவர்கள், வளரவும் வாழவும் குறுக்குவழிக் கொள்கைதாம் பயன்படும் போலும் என்று தவறாகப் புரிந்துகொண்டு, சபல புத்திக்கு அடிமையாகி, முன்கூறிய பொல்லாக் கும்பலின் போதனைப்படி நடக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

கணக்கில்லாப் படிக்கட்டுகள் அமைந்த ஒரு மலைப்பாதையில் நான்கு நான்கு படிக்கட்டுக்களாக நம்மைத் தாண்டிக் கடந்து செல்பவனின் வேகம் கண்டு நமக்கே வேகம் பிறக்கத்தான் செய்யும். ஆனால் சிறிது இடைவெளிக்குப் பின் அவன் நம் காலடிகளைத் தழுவிக்கொண்டு உருண்டு புரண்டு அடிவாரத்தை அடைந்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காணமுடியும்.

குறுக்கு வழியில் உயர்ந்தவர்களெல்லாம் ஒரு காலகட்டத்தில் தாழ்ந்து விடுவார்கள் என்பது எல்லோர் விடயத்திலும் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லையே என்ற உங்களது வாதம் என் காதில் விழுகிறது.

எதற்குமே விதிவிலக்குகள் உண்டு. ஆனால் அப்படி விதிவிலக்காக வாழ்பவர்கள் மனநிம்மதியுடன் வாழ்கிறார்களா? என்பதில் எனக்கு மிகுந்த ஐயம் உண்டு. நல்லவர்களுக்கு வேறு எது மிஞ்சாவிட்டாலும் இந்த மனநிம்மதி மிஞ்சுகிறதே. அது ஒன்று போதும்.

அநியாய வழி ஆண்டது கிடையாது, நியாய வழி மாண்டது கிடையாது.

எந்தவொரு வழியும் எத்தகைய வளர்ச்சியும் நீண்டகாலத்திற்குத் தாங்குமா? எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையான செயலாக இருக்குமா? என்பதை யோசிக்க வேண்டும். பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

வாழ்ந்தால் வாழ்த்தும், தாழ்ந்தால் தாக்கும். இதுதான் உலகம்.

வாழ்த்தவாவது வேண்டாம், மற்றவர்களின் வாயில் புகுந்து புறப்படாமல் இருந்தால் சரி என்ற உறுதியை மேற்கொண்டு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதே நிம்மதியான வழி.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருடன்



அந்தத் திருடனைப் பார்த்து, "திருடர்களிடம் இருந்து நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.

அந்தக் கட்டிலுக்கு அடியில்ஒளிந்து கொள். என்ன நடந்தாலும் வெளியே வராதே" என்றான். அதன்படியே "அந்தத் திருடன் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டான்.

தன் மனைவியை அழைத்த நீலகண்டன் அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னான். அவளும் தலையை ஆட்டினாள்.

"நான் பின் பக்கத் கதவு வழியாக வெளியே செல்கிறேன். உதவிக்கு ஆட்களை அழைத்து வருகிறேன். அதுவரை நான் சொன்னது போலச் சமாளி. எதற்கும் அஞ்சாதே" என்ற அவன் அங்கிருந்து வேகமாகச் சென்றான்.

முன் பக்கத் கதவை உடைத்துக் கொண்டு ஐந்து திருடர்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்கள் கையில் கத்தியும், ஈட்டியும் வைத்திருந்தனர். பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தனர்.

அங்கே பெண் ஒருத்தி மட்டும் நின்றிருப்பதைப் பார்த்துத் திகைப்படைந்தனர். "என்ன? நீ மட்டும் தனியாக இருக்கிறாய்.

உன் கணவன் எங்கே?" என்று அவர்களில் ஒருவன் கத்தினான். அவள் அருகே வந்த இன்னொருவன், "உன் நகைகளை எல்லாம் தந்துவிடு. இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேன்" என்று மிரட்டினான்.

"என்னைக் கொன்று விடாதீர்கள். என்னால் இப்போது நகைகளை உங்களிடம் தர முடியாது" என்று கெஞ்சினாள் அவள். "ஏன் தர முடியாது?" என்று மிரட்டினான் மற்றொருவன்.

"நான் என்ன செய்வேன்? நகைகள் எல்லாம் அலுமாரியில் வைத்துப் பூட்டப்பட்டு உள்ளன. சாவி என் கணவரிடம் உள்ளது" என்றாள். "உன் கணவனிடம் சாவி உள்ளதா? அவன் எங்கே இருக்கிறான்?" என்று கத்தினான் முதலாம் திருடன்.

நடுங்கியபடியே அவள், "உங்களைப் பார்த்து அஞ்சிய அவர் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டார்" என்றாள். அப்போதுதான் அவர்கள் கட்டிலுக்கு அடியில் ஒருவன் ஒளிந்து இருப்பதை பார்த்தனர்.

"ஏ கோழையே! நீயும் ஒரு ஆண்மகனா? மனைவியை எங்களிடம் சிக்க வைத்துவிட்டு, நீ ஒளிந்து கொண்டாயா? எழுந்து வெளியே வா" என்று கோபத்துடன் கத்தினான் அவர்களில் ஒருவன்.

ஐயோ! ஆபத்தில் சிக்கிக் கொண்டேனே என்று நடுங்கிய அந்தத் திருடன். வெளியே வரத் தயக்கம் காட்டினான்.

கோபத்துடன் கட்டிலைப் புரட்டிப்போட்ட அவர்கள் அவனைத் தூக்கினர்.

(தொடரும்)

# மகாபாரதம்

296



இந்தக் குழந்தையின் மரணத்திற்கு நீயும் காரணமல்ல. நானும் காரணமல்ல. காலம்தான் காரணம். நாம் அனைவரும் காலத்திற்கு உட்பட்டவர்கள். பாம்பே, விண்ணிலும் மண்ணிலும் உள்ள அசையும் பொருட்களும், அசையாப் பொருட்களும் காலத்தினாலேயே நடத்தப்படுகின்றன.

இவ்வுலகம் அனைத்தும் காலத்திற்கு கட்டுப்பட்டே நடக்கின்றது. "பாம்பே! சூரியன், சந்திரன், நட்சத்திரம், இந்திரன், விஷ்ணு, காற்று, ஆகாயம், பூமி, மேகம், அக்னி, வசுக்கள், நதிகள், கடல்கள், அதி தேவதைகள் ஆகியவை எல்லாம் காலத்தால் ஆக்கப்படுகின்றன. அழிக்கப்படுகின்றன.

இப்படியிருக்க என்னைக் குற்றவாளியாக நீ கருதுவானேன். ஒருவேளை என்னிடம் குற்றம் இருக்குமாயின் நீயும் குற்றவாளியே!" என்று கூறினான்.

பாம்பு எமனை நோக்கி "உம்மைக் குற்றவாளி என்றோ குற்றமற்றவர் என்றோ நான் சொல்லவில்லையே. உன் ஏவலால் தான் நான் இதைச் செய்தேன் என்றேன்.

இது காலத்தின் குற்றமாயும் இருக்கலாம். இல்லாமலும் இருக்க லாம். அதனை தீர்மானிக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லை.

அந்தக் குற்றத்தினின்று நான்விடுபட நினைப்பது போல நீயும் விடுபட விரும்புவது இயற்கையே" என்று சொல்லியபடியே பின் வேடனை நோக்கி "எமனின் சொல்லைக் கேட்டாயா? நிரபராதி ஆனஎன்னைக்கொல்வது தகாது" என்றது.

இதற்குவேடன்"பாம்பே உன் பேச்சையும், எமனின் பேச்சையும் கேட்டேன். என் நிலையில் மாற்றம் இல்லை. இக்குழந்தை இறக்க நீயும் காரணம், எமனும் காரணம். யாவருக்கும் துன்பத்தைத் தரும் எமன் அனைவராலும் இகழத் தக்கவன். நீ கொல்லப்பட வேண்டியவன்" என்றான்.

இதற்கு எமன் வேடனிடம், "நாங்கள் இருவரும் சுதந்திரம் அற்றவர்கள். எங்கள் கடமை காலம் இட்ட கட்டளையைச் செய்வது தான்.

நீ நன்கு ஆராய்ந்து பார்த்தால்,எங்களிடம் குற்றம் இல்லை என்பதை உணர்வாய்" என்றான்.

வேடன், "எமனே! பாம்பே! நீங்கள் காலத்துக்கு உட்பட்டு நடப்பீராயின் எனக்கு உங்கள் மீது வருத்தம் உண்டாவதேன்" என்றான்.

எமன் உடன் வேடனே நான் திரும்பச் சொல்கிறேன். உலகில் எல்லாச் செயலும் காலத்தால் செய்யப்படுகின்றன.

ஆகையால் நாங்கள் இருவரும் காலத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே நீ எங்களைக் குற்றவாளியாக நினைக்கக் கூடாது" என்றான்.

இச்சமயத்தில் காலதேவன் நேரில் வந்தான். பாம்பையும், எமனையும், வேடனையும் நோக்கிக் கூற ஆரம்பித்தான்.

"வேடனே.. நானும், எமனும், பாம்பும் இக்குழந்தை மாண்டதற்குக் காரணமில்லை. ஆதலால் நாங்கள் குற்றவாளியில்லை. இந்த குழந்தை செய்த வினைதான் எங்களை தூண்டிற்று.

இது இறந்ததற்குக் காரணம் வேறு யாரும் இல்லை.தன் வினைப் பயனாலேயே இக்குழந்தை கொல்லப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம்.

– சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேசப் பாடசாலை பற்றி ஒருகணம் சிந்தியுங்கள்!

பெருந்தகையீர்! அனைவருக்கும் அன்பு வணக்கம். இங்கு நாம் பேசுபடுபொருளாய் எடுத்துக் கொண்ட விடயம் தீவகத்தின் அல்லைப்பிட்டி மண்ணில் அமையப்பெற்ற சர்வதேசப் பாடசாலை பற்றியதாகும்.

இதைப் பேசுவதற்கு முன்னதாக, இவ்விடயத்தைப் பிரஸ்தாபிப்பதற்குள் எந்தவித உள்நோக்கங்களோ அன்றி சமயக் காழ்ப்புணர்வோ, இல்லை என்பதை சத்தியப்படுத்திக் கொள்கின்றோம்.

மாறாக, அல்லைப்பிட்டியில் அமையப் பெற்ற சர்வதேச பாடசாலை இயங்கும்போது அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் என்ன என்பதை இவ்விடத்தில் குறித்துரைப்பது மட்டுமே நம் நோக்கமாகும்.

சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்வது தர்மம். அந்த வகையிலேயே நம் கருத்தியல் அமைகிறது.

தவிர, நாம் இதைக் கூறுவதால் யதார்த்தவாதி வெகுசன விரோதி என்ற வகுதிக்குள் அடக்கப்படலாம். ஆனால் நம் நிலைப்பாட்டில் பலரும் உள்ளனர். எனினும் துரியோதனன் சபையில் மானபங்கப்படலம் நடந்தபோது; அமைதியாய் நின்ற வீஷ்மர்களாக – துரோணர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

இதுவே நம் தமிழினத்தின் பெரும் துரதிர்ஷ்டம் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் வடபுலத்துத் தமிழர் பகுதியில் சர்வதேசப் பாடசாலைக் கலாசாரம் தோல்வியில் முடிந்து வருவதைக் காணமுடியும்.

தன் பிள்ளை சர்வதேசப் பாடசாலையில் கற்க வேண்டும் எனத் தன்னார்வம் கொண்ட பெற்றோர்கள், அந்தப் பாடசாலைகளில் பணத்தைக் கட்டி பிள்ளைகளைச் சேர்த்தனர்.

எனினும் பணச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாமல், பெற்றோர் தவிப்பதும் அதிலிருந்து விலக முடியாமல் அந்தரிப்பதும் நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் பல வழிகளிலும் பின்னடைவைக் கண்டுள்ள தீவகத்தில் சர்வதேசப் பாடசாலை இயங்கும்போது அது தீவகத்திலுள்ள அத்தனை பாடசாலைகளையும் வெறுமையாக்கும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

ஆம், வசதியீனமும் வளப்பற்றாக்குறையும் உள்ள தீவகப் பாடசாலைகள் மிகக் கடுமையான போராட்டங்களின் மத்தியில் இயங்குகின்றன. இதனால் அந்தந்த ஊர்ப் பாடசாலைகளில் மாணவர்கள் கற்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் அல்லைப்பிட்டியில் சர்வதேசப் பாடசாலை இயங்கும்போது, 2022ஆம் ஆண்டில் தீவகப் பாடசாலை பலவற்றில் தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி பூச்சியம் என்ற குறியீட்டைக் காட்டும்.

இதற்கு மேலாக, ஏனைய வகுப்புக்களில் உள்ள மாணவர்களில் ஒருபகுதியினர் சர்வதேசப் பாடசாலையை நோக்கி நகர, எஞ்சிய மாணவர்கள் தங்கள் வறுமையை நொந்து; பாடசாலையில் இருந்து இடைவிலகுவர்.

இந்நிலை நீண்டு செல்ல, தீவகத்திலுள்ள கணிசமான பாடசாலைகள் மூடுவிழாக் காணும்.

இதன் ஒட்டுமொத்த விளைவு ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி கிடைக்காமல் போகும். இந்நிலைமை தீவகத்தை மிகமோசமாகப் பாதிக்கும்.

எனவே தீவகத்தில் சர்வதேசப் பாடசாலையை இயக்குவது என்ற சிந்தனை தீவகத்தின் கல்வியை கடைத்தேற முடியா நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதால்,

மேன்மைமிகு பெருந்தகைகள்! இது விடயத்தில் மீளாய்வு செய்ய வேண்டும்.

# பூஸ்டர் தடுப்பூசியை பெறுவதில் ஆர்வம் காட்டாத வடக்கு மக்கள்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது தடுப்பூசியை பெற்று மூன்று மாதத்தின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும், பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் வடக்கு மாகாண மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் இதுவரை 3 கொரோனா இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியைப் பொறுத்தவரை வட மாகாணத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசியை 90 வீதமானவர்களும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை 80 வீத மானவர்களும் பெற்றுள்ள நிலையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை 30 வயதுக்கு மேல் 25 வீதமானவர்கள் பெற்றுள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதத் தின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொது மக்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை என அவர் தெரிவித்தார். (நி-33)

## சீன உர நிறுவனத்துக்கான பணம் இன்று செலுத்தப்படும்

(கொழும்பு)

தரமின்மை காரணமாக நிராகரிக்கப்பட்ட உரத்தை இலங்கைக்கு கொண்டுவந்த சீன உர நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய 6.7 மில்லியன் டொலர்கள் பணம் இன்று செலுத்தப்படவுள்ளது.

சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சேதன உரம், உரிய தரத்தில் இல்லாத நிலையில் அதனை அரசாங்கம் நிராகரித்திருந்தது.

இதனால் குறித்த உரம் கப்பலில் இருந்து இறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும் இதற்கான கட்டணத்தை இலங்கை வழங்க வேண்டும் என்று சீன உர நிறுவனம் வலியுறுத்தி வந்தது.

அதேநேரம் குறித்த நிறுவனத்துக்கு கட்டணத்தைச் செலுத்துவதற்காக கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத் தடை அண்மையில் நீக்கப்பட்டது. (ம)

## கோப்பாய் பொலிஸ் நிலையம் அருகில் வீட்டுக் கூரையிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றின் கூரைத் திருத்த வேலையின் போது கூரைக்குள்ளிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டின் கூரைத் திருத்த வேலைகளை வேலையாட்கள் நேற்று வியாழக்கிழமை காலை மேற்கொண்டிருந்த நிலையில் கூரையின் மேற்பகுதியில் கைக்குண்டொன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தமையை கண்ட அவர்கள் வீட்டுக்கு உரிமையாளருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்துக் குறித்த வீட்டின் உரிமையாளர் சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவித்தமையை அடுத்துச் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18,33)

## ரூபவாஹினியின் தலைவர் பதவி விலகினார்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரெஜினோல்ட் குரே நேற்று தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

தனது அலுவலகம் மற்றும் உத்தியோகப்பூர்வ வாகனத்தைக் கையளித்துவிட்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபன வளாகத்தை விட்டு அவர் வெளியேறியுள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** டெலிகொம் சுன்னாகம், ஏழாலை, கட்டுவன், கட்டுவன்புலம், குப்பிழான், மயிலங்காடு, சூறாவத்தை, சுன்னாகம், புகையிரத நிலைய வீதி மணியம் கடையடி, தோப்பு- ஏழாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், பழைய பூங்கா வீதி, பாசையூர், பெரிய கோவில், புங்கங்குளம், உதயபுரம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** அரச்கேணி, இத்தாவில், கச்சார்வெளி, முகமாலை, இந்திராபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பூ ஓயா, ஈரப்பெரிய குளம், இராணுவ முகாம், குருந்துபிட்டிய, தேசிய இளைஞர் பயிற்சி முகாம், அழகல்ல (தீருவேகம), அளுத்கம, ஈரப்பெரியகுளம், பொலிஸ் நிலையத்தடி, ஈரப்பெரிய குளம், கல்குண்டாமடு, பகல அளுத்வத்த, புபுதுகம, வேரகம ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீரவழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் கார்கில்ஸ் பூட் சிட்டி, கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம், மூர்வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா டெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி. மைதானம்- மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருடலை உணருங்கள்

நான் தவறு செய்திருப்பின் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் என்று ஒரு பக்தர் குருஜியிடம் கேட்டார்.

குருஜி:- ஏன் நீங்கள் மன்னிக்கப்பட வேண் டும்? உங்களிடம் ஒரு நெருடல் (உறுத்தல்) ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து விடுபடவேண்டும் என்ற காரணத்திற்காக ' மன்னிப்பு வேண்டும் என்று கேட்கிறீர்கள் இல்லையா? அந்த நெருடல் அப்படியே இருக்கட்டும். அது உங்களை [illegible] தவறு [illegible] விடாது. [illegible] மீண்டும் அதே தவறைச் செய்வீர்கள்!. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

### அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்

குரோதம், பொறாமை உள்ளவனுக்குச் செல்வம் இல்லை. நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போகவேண்டும்? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? இந்த உடம்பு எப்படி வந்தது? தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் யார் என்ற வினாக்கள் உன் உள்ளத்தில் எழும். அவைகளை உணர்க. வந்த வேலையை செய்ய வந்த சேலையை மறந்து மயங்கித் திரியாதே. நல் வழியில் திரும்பு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து நிலையில் இலங்கை

## லண்டன் பத்திரிகை செய்தி வெளியீடு

(லண்டன்)

அந்நியசெலாவணி கையிருப்பு தட்டுப்பாடு, கடுமையான பணவீக்கம் அதிகரிப்பு காரணமாக 2022 ஆம் ஆண்டில் இலங்கை வங்குரோத்து அடையும் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பதாக பிரித்தானியாவில் வெளியாகும் தி.கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையர்களில் 5 பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் துரிதமாக நாட்டை விட்டுச்செல்ல ஏற்கனவே தயாராக வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் குடும்பங்களில் பெரும்பான்மையான குடும்பங்களின் வருமானமானது அவர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட போதுமானதாக இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த குடும்பங்கள் கடும் பொருளாதார சவால்களை எதிர்நோக்கி வருகின்றன எனவும் தி.கார்டியன் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை வாழ்க்கை செலவு அதிகரிப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை மக்கள் அன்றாட உணவை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைக்கு உள்ளாகி இருப்பதாகவும் உணவுப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ள தாகவும் பி.பி.சி. செய்தி சேவை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது. (நி)


## பூநகரிப் பிரதேச சபை
## பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரல் அறிவித்தல் - 2022

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச சபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் என்பன 2022 ஆம் ஆண்டிற்காக 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பகிரங்க ஏலம் கோரல் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- ஏல கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.01.2022 - 19.01.2022 வரை
- ஏல கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 19.01.2022 மு.ப 10.00 மணி வரை
- ஏலம் நடைபெறும் திகதி : 19.01.2022
- ஏலம் நடைபெறும் நேரம் : மு.ப 11.00 மணி
- ஏலம் நடைபெறும் இடம் : பூநகரி பிரதேச சபை

பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்ப படிவத்தை பூர்த்திசெய்து பிரதேச சபையில் வழங்குவதன் மூலம் தங்களது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இவ்விடயம் தொடர்பாக வாடியடி பூநகரியில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் (மு.ப 8.30 மணி - பி.ப 4.15 மணி) தாங்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ நிர்ணயிக்கப்பட்ட இழிவுத் தொகைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவகுமாரன் ஸ்ரீறஞ்சன்
தலைவர்
பூநகரி பிரதேச சபை.

தொடர்பு :- 021 228 2666
021 206 0856 (C-3452)


# யாழ்.போதனாவில் சிகிச்சை பெறச்சென்ற பெண்ணின் தங்க நகைகள் திருட்டு

(குப்பிழான்)

யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறச் சென்ற வயோதிபப் பெண்மணியின் மூன்று பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த வயோதிபப்பெண் நேற்று வியாழக்கிழமை சிகிச்சையின் நிமித்தம் "எக்ஸ்ரே" எடுப்பதற்காகச் சென்ற போதுதான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றினைக் கழற்றித் தனது கைப்பையினுள் வைத்துச் சென்றுள்ளார்.

திரும்பி வந்து கைப்பையினைப் பார்த்த போது அதனுள்ளிருந்த தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தமையைக் கண்ணுற்று மருத்துவமனை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து நிர்வாக த்தின் அறிவுறுத்தலுக்கு அமைய மருத்துவமனைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வருவோர் தங்க நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களுடன் வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மருத்துவமனை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-18-33-104)


## சிறுநீரக உதவி கோரல்

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் வசிக்கும் 32 வயதுடைய செ. தேவராசா ஆகிய நான் இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்புற்ற நிலையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்வதற்கு A+ இரத்த வகை சிறுநீரகம் ஒன்று வழங்கக்கூடிய பெருந்தன்மை உடையவர்கள் உதவிசெய்ய முன்வருமாறு வேண்டுவதுடன் வழங்குவதற்கு விருப்புடையவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க எனது நண்பர்களின் உதவியை தங்களுக்கு பெற்றுத்தர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு (C-3461)

076 533 5356
077 108 1221



## அகரம் உயர் நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் கொக்குவில்

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு ஆரம்பம் - 2022
09.01.2022
ஞாயிற்றுக்கிழமை

நேரம்
தரம் 9, 8, 7 - மதியம் 1.00
தரம் 10,11 - காலை 6.20

### ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கு மட்டும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பு: ( இதுவரை காலமும் ஆங்கில மொழிமூல வகுப்புகளிற்கு 35 மாணவர்களிற்கு மாத்திரமே அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இருந்து 50 மாணவர்கள் வரை உள்வாங்கப்படுகின்றனர். )

ஆங்கில மொழி மூலமான போதனைப் பாடங்கள்

**தரம் 6 - 9 வரையான வகுப்புகளிற்கு**
கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், தகவல் தொழினுட்பம்

**தரம் 10 - 11 வரையான வகுப்புகளிற்கு**
கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழினுட்பம், வர்த்தகம், ஆங்கில இலக்கியம்

**தரம் 06 -11 வரையான பொதுப் பாடங்கள்**
தமிழ், வரலாறு, ஆங்கிலம்
( தரம் 11 வகுப்பிற்கு மாத்திரம் சைவ சமயப் பாடம் நடைபெறுகின்றது. )

"அகரம் எம்தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(9447)



## ஆடுகள் திறந்த ஏலத்தில் விற்பனை செய்தல்
## பிராந்திய கால்நடை பண்ணை, அச்சுவேலி

பிரதிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணத்தின் கீழ் இயங்கும் அச்சுவேலி கால்நடைப் பண்ணையில் உள்ள 04 ஆடுகளை திறந்த ஏலத்தில் விற்பனை செய்தல்.

- ஆடுகளின் விபரம் :-
  ஆண் - 01 (வயது 4 1/2 ஆண்டுகள்)
  பெண் - 03 (வயது 2 1/4 , 2 3/4, 1/2 ஆண்டுகள்)
- பார்வையிடக்கூடிய இடம் மற்றும் காலம் - 10.01.2022 ஆம் திகதி தொடக்கம் 15.01.2022 ஆம் திகதிவரை (8.30 AM - 3.30PM) கால்நடை பண்ணை அச்சுவேலியில் நேரடியாக பார்வையிடமுடியும்.
- திறந்த ஏலம் நடைபெறும் இடம் மற்றும் காலம் - கால்நடை பண்ணை அச்சுவேலி 18.01.2022 10.00 AM.
- வெற்றிகொண்ட ஏலதாரர் ஏலத்தொகையை உடனடியாகச் செலுத்தி ஆடுகளை பண்ணையிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.
- வாகனத்தில் ஏற்றுதல் மற்றும் கொண்டு செல்லல் என்பவற்றை தாங்களே பொறுப்பேற்றல் வேண்டும்.
- பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களின் முடிவே இறுதியானது.

பிரதிப் பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(C-3456)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

கையில் இதுவரை பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15,083 ஆக பதிவாகியுள்ளது. (ம)

## உயிரிழந்த...

பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (ம)

## புதிய பாடமாக...

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொரிய குடியரசின் பிரதிப் பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருடன் சியோல் நகரில் இடம்பெற்றசந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தென் கொரியாவில் பணிபுரியும் 22,000 இலங்கையர்களைப் பற்றிக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் கொரிய மொழிப் புலமையை இலக்காகக் கொண்ட கற்றல் கற்கைநெறிகளின் பிரபல்யம் குறித்து குறிப்பிட்டுள்ளார். (ம)

## எரிவாயு அடுப்பு...

எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

தரவான் கோட்டை பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலில் ஈடுபடும் பெண் ஒருவரின் வீட்டிலேயே மேற்படி வெடிப்புச் சம்பவம் காரணமாக குறித்த பெண்ணின் குடிசை வீடு எரிந்து முற்றுமுழுதாக நாசம் ஆகிய நிலையில் குறித்த பெண் அதிர்சியின் காரணமாக மயக்கம் அடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசிப்பதுடன் பனம் பொருள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுவந்த நிலையிலேயே இவ்வாறான வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ம-285)

## அரசுக்கு எதிராக...

டுள்ளமை கவலையளிப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாண மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும்முகமாக பலாலி சர்வதேச விமான நிலையம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.

குறிப்பாக வட பகுதியில் உள்ள மக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவுடன் தென்பகுதிக்கு வந்து செல்வதற்கும் தென்னிந்தியாவிற்கு சென்று வருவதற்கு மாக இந்த விமான நிலையம் திறந்து விடப்பட்டது.

அது வடபகுதி மக்களுக்கு கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆனால் இந்த அரசாங்கமானது அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்து தற்போது விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

எனினும் பொறுத்திருந்து பார்ப்போம். நான் தற்போது அரசியலில் இல்லை. அத்தோடு நான் அங்கம் வகித்த கட்சியிலிருந்து விலகி இருக்கின்றேன். எனினும் நான் நினைக்கின்றேன் இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்பு கொண்டுள்ளார்கள். இந்த அரசாங்கம் விரைவில் வீடு செல்ல வேண்டி வரும்.

எனினும் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்காக ஒன்றிணைந்து ஒரு கூட்டணியாக செயற்படும்காலம் விரைவில் கைகூடும். அது விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன் என்றார். (ம-18,33)

## இந்தியப் பிரதம...

கோரும் ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன.

கடந்த 21ஆம் திகதி இறுதி செய்யப்பட்ட ஆவணத்தில் சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் நேற்று ஒப்பமிட்டனர்.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன் (தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), சி.வி.விக்னேஸ்வரன் (தலைவர் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), சுரேஷ் பிரேமச்சந்திரன் (தலைவர் - ஈ.பி.ஆர்.எல்.எப்.), என்.ஸ்ரீகாந்தா (தலைவர் - தமிழ்த் தேசியக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர் - ரெலோ), த.சித்தார்த்தன் (தலைவர் - புளொட்) ஆகியோர் நேற்று ஒப்பமிட்டனர்.

மாவை சேனாதிராசா (தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சி) இன்று அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 21ஆம் திகதி கொழும்பிலுள்ள குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

இதேவேளை, இந்த ஆவணத்தயாரிப்பு முயற்சியில் மும்முரமாக செயற்பட்ட மனோ கணேசன் கடைசி நேரத்தில் காலைவாரினார். அவர் கையெழுத்திடவில்லை. நேற்று முன்தினம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் மத்தியகுழு கூடியது. இதில் ஆவணத்தில் கையெழுத்திடுவதில்லையென முடிவானது.

இதை ஏற்பாட்டாளர்களிடம் மனோ கணேசன் தெரிவித்திருந்தார்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையை அமுல்படுத்துமாறு தமது கட்சிக் கொள்கையை மீறிகையெழுத்திட முடியாதென ரவூப் ஹக்கீம் முன்னதாக தெரிவித்திருந்தார்.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தலைவர்கள் நாளை சனிக்கிழமை இந்தியத் தூதுவரிடம் குறித்த ஆவணத்தை கையளிக்கவுள்ளனர். (ம)

## காஸ் அடுப்பு...

சிதறியுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அடுப்பு வெடிப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர் தடயவியல் பொலிஸாரும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொண்டனர். (ம-316)

## அரிசி...

இம்முறை பெரும்போக விவசாயத்தில் அதிக விளைச்சலை பெற முடியாது. விவசாயிகள் தங்களின் சுயதேவைக்காக மாத்திரமே விளைச்சலை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் எதிர்வரும் மாதம் முதல் பொதுமக்கள் அரிசியை பெற்றுக் கொள்வதற்காகவும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் அரிசியின் விலை 300 ரூபாய் வரை அதிகரிக்கும் என்றார். (ம)

## திரு...

கையொப்பமிட்டவர்கள் திறைசேரி செயலாளர் (இலங்கை அரசாங்கத்தின் சார்பில்), காணி ஆணையாளர் நாயகம் ஆகியோராவர்.

இதேவேளை, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவிற்கு வழங்கப்படுவதற்கு எதிராக தான் நீதிமன்றத்தை நாடப்போவதாக எல்லே குணவன்ச தேரர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாட்டின் பொரு...

திருந்தபோது, கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்ட சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல், நிதியமைச்சர் இந்தியாவிற்கு சென்று கடன் கோரியுள்ள நிலையில், திருகோணமலை எண்ணெய் குதங்கள் தாரைவார்க்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் உண்மை நிலை தொடர்பான விபரங்களை வெளியிடுவோர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றனர்.

இவ்வாறு முறையற்ற நிர்வாகத்தினால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பின்னடைவை எதிர்நோக்கி வருவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

### தன நிதானய
திகதி - 2022.01.06
சீட்டிழுப்பு இலக்கம் - 669
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 14 20 66 78

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 06.01.2022
சீட்டிழுப்பு இலக்கம்: 2934
ஆங்கில எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 37 40 54 69

### மஹஜன சம்பத
திகதி: 2022/01/06
சீட்டிழுப்பு இலக்கம்: 4639
ஆங்கில எழுத்து: T — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 8 7 6 9 4

### சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி: 2022/01/06 — சீட்டிழுப்பு இலக்கம்: 1659
சுப்பர் இலக்கம்: 11 — வெற்றி இலக்கங்கள்: 17 35 40 51

### மெகா பவர்
திகதி: 06/01/2022
சீட்டிழுப்பு இலக்கம்: 0987
வெற்றி எழுத்து: B — சுப்பர் இலக்கம்: 18 — வெற்றி இலக்கங்கள்: 13 26 44 75

### செவண
திகதி: 06/01/2022
சீட்டிழுப்பு இலக்கம்: 341
ஆங்கில எழுத்து: S — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 33 44 62 80

### அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1442
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 06.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை: ரூ. 5,520,500
வெற்றி இலக்கங்கள்: 20 39 58 72 — ஆங்கில எழுத்து: N
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3777
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 06.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை: ரூ. 5,242,300
வெற்றி இலக்கங்கள்: 41 42 50 71 — ஆங்கில எழுத்து: U
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம்: 1616 — நிறம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 06.01.2022 — தினம்: வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: X 28 31 64 70
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 53,227,996/=

### ரிச்சி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,209,758/=
திகதி: 06.01.2022
வெற்றி வாரம்: 3328
வர்ணம்: கபில நிறம்
வெற்றி இலக்கங்கள்: 07 31 52 59 — துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,527,180/=

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 07 10 53 59 65
சீட்டிழுப்பு வாரம்: 792 — செவ்வாய்/வியாழக்கிழமை — 2022.01.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 201,845,413/-
தொலை பேசி: 011-2 333 546-47 — Web: www.dlb.lk

### சுவர்தன வாசனாவ
திகதி: 2022-01-06
வெற்றி வாரம்: 474 | வர்ணம்: நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 12,311,972/-
ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 64 13 48 — 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,277,140/-
ரூ. 12,422,808/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண் / பெண் ஊழியர்கள் தேவை.

நேரில் வரவும்

**சிவகணேசன் ரெக்ஸ்**
இல. 41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(9450)

## A/L-வரலாறு

தேசிய, மாவட்ட ரீதியில் உயர் பெறுபேறுகளுக்கு வித்திட்ட உங்கள் ஆசிரியர்

**M.பத்மன்** B.A (Hons) History, PGDE, M.A (History)

கற்பிக்கும் இடங்கள்

- D.M.I - ஆரியகுளம், யாழ்ப்பாணம்,
- உயர் கலைக் கல்லூரி - குளப்பிட்டி, கொக்குவில்
- BITSMANS - மானிப்பாய்.

2023 பிரிவுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பம்
2022 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
" வெற்றிக்காக இணைவோம் "
(C-3458)

## SPOKEN ENGLISH

மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் ஆங்கிலம் பேச

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- விரும்பிய நேரத் தெரிவு
- 100% பேச்சுப் பயிற்சி
- சிநேகபூர்வமான தனிப்பட்ட கவனிப்புடன் கூடிய கற்பித்தல்
- நவீன வசதிகள் அடங்கிய குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்
- பயற்சி நிறைவு செய்பவர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ்கள்
- முதல் வகுப்பு முற்றிலும் இலவசம்

விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**WINSTAR CONSULTANTS PVT LTD**
No. 45, VEMBADY STREET, JAFFNA.
077 395 0857 | 071 071 6979
(9443)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9403)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள கடை ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் தேவை.(வயது 18 - 35). மேலும் லொத்தர் ரிக்கட் விற்பனை உதவியாளர் தேவை. (வயது 18 - 60)

தொடர்புகளுக்கு
077 122 8841 | 075 881 0010
(9445)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 180 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[ மேட்டுநிலம், நிலப்பரப்பு ]

நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 4 இலட்சம்

தொடர்புகளுக்கு
077 911 6983, 077 658 5999
077 288 0152, 077 623 4204
(9446)

## வரலாறு கருத்தரங்கு

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்

ஆரம்பம் நாளை 08.01.2022 / 09.01.2022

A/L 2021 - 12.00 - 4.00 P.M

S.V.R இரவீந்திரன்
S.S.Y பிரதீபன்

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**DCM யாழ். நகர்**
வேம்படி மகளிர் கல்லூரி அருகில். 077 011 9434
(C-3453)

## உதவியாளர் தேவை

யாழ். நகரில் உள்ள கிளினிக் ஒன்றுக்கு பகுதி நேரமாக பணியாற்றக் கூடிய பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு
077 375 4490
077 220 3062
(C-3455)

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் எமக்கு வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.) நிர்வாகி

அருண் ரெக்ஸ் & பேபி நீட்ஸ் (நெல்லியடி)
077 714 9459
(C-3425)

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2023**
கலை, வர்த்தக கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம்
08.01.2022 சனி 8.00 மணி
076 535 0999, 077 469 6695
(C-3450)

## வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்

IELTS | Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777
(C-3382) R1

## 31ஆம் நாளில் நீங்காத நினைவுகள்



மண்ணில் 12 - 05 - 1986
விண்ணில் 08 - 12 - 2021

அமரர்
**கந்தசாமி சுதாஸ்கரன்** B.A (Hons), M.A
( தமிழ் பாட ஆசிரியர் )

இந்துவின் தமிழ்ப் புலமையே!
இளவலாய் எம்முன் தோன்றி
கரைகாணாக் கல்வியை
கருத்தோடு போதித்தாய்
மாறாத குணத்தினால்
மனங்களில் வாழ்கின்றாய்
ஆறாத காயத்துடன்
அஞ்சலித்து நிற்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி.
(C-3454)

## KBK Accounting College

கந்தர்மடம் | கொழும்புத்துறை

A/L கணக்கீடு | Gr.10, 11 வணிகமும் கணக்கீடும்

திரு. க. பா. பாலகஜன் M.Com
077 216 8884
(9436)

10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY
07792654447 / 0217200989
(C-3438)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL
(C-3381)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வெளிவந்து விட்டது

## க.பொ.த உயர்தரம் (A/L) - 2022
## தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்

**SCIENCE FOR TECHNOLOGY**

இறுதி எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன்
ஆக்கம்
யாழின் முன்னணி SFT ஆசிரியர்

**K.Mathusuthan** B.Sc(Hons), M.Sc

கிடைக்குமிடங்கள் :

- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- மற்றும் கிளிநொச்சி, வவுனியா நகர புத்தகசாலைகளில் கிடைக்கும்.

வெளிமாவட்ட மாணவர்கள் துரிதமாக பெற்றுக்கொள்ள கீழுள்ள இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
077 907 3773
(C-3445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.